**செய்தி வெளியீடு எண்:123** **நாள்:14.02.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 13.2.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வனத்துறையில் 2018–19ஆம் ஆண்டிற்கான 313 வனக்காப்பாளர்கள் மற்றும் 62 ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்கள் பணியிடங்களுக்கு தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் திரு.சி.யுவராஜ், இ.வ.ப., தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வு குழுமத்தின் தலைவர் திரு. விஜேந்திர சிங் மாலிக், இ.வ.ப., கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்) திரு. அனுராக் மிஸ்ரா, இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**